DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.347/2025

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். சௌமியா (Lw - 7) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 11.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.04.2025ந் தேதி மாலை 04.00 மணிக்கு கொல்லிமலை, அரசு வட்ட மருத்துவமணையில் பணியிலிருந்தேன்.

அப்போது சாமிதுரை என்பவரை ராஜம்மாள் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். சாமிதுரையை விசாரித்த போது அவரை 12.04.2025ந் தேதி மாலை 03.40 மணியளவில் பெரியசோளக்கண்ணியில் வைத்து தெரிந்த 2 நபர்கள் கட்டையால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு இடது பக்க தலையில் வெட்டு காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்.

12.04.2025ந் தேதி சாமிதுரைக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(**கொல்லிமலை அரசு மருத்துவமணை விபத்து பதிவேடு அ**.**சா**.**ஆ**.4** ஆகவும்**,** காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

காயம்பட்ட சாட்சி சாமிதுரை நடந்து வந்து சிகிச்சையில் சேரும் நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். சாமிதுரைக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றால் சரிதான். சாமிதுரைக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் தையல் போடவில்லை என்றால் சரியல்ல. தையல் போட்டேன். பொதுவாக ஒரு நபர் கீழே விழும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் கூர்மையான பொருளின் மீது விழும்போதும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சாமிதுரை உள் நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெறும் அளவிற்கு காயம் இல்லை என்றால் சரிதான். சாமிதுரையை நான் நாமக்கல் மருத்துவமனைக்கு பரிந்துரைக்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**